1978 பிப்ரவரி 28]

[முற்பகல் 10.20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நான் சொன்னது, அவர்கள் சி.ஐ.டி. என்ற முறையிலே என்னிடம் அனுமதி பெற்று வரவில்லை. அவர்களும் நடவடிக்கைகளைப் பார்க்கலாம் என்று வந்து இருக்கலாம். அவர்களும் மனிதர்கள் தான், அவர்களும் நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கு உரிமை இருக்கிறது. சி.ஐ.டி.க்கள் இந்த நடவடிக்கைகளைப் பார்க்கக் கூடாது என்று சொல்ல முடியாதல்லவா ?

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நான் கேட்டுக் கொள்வது, என்ன நடைபெற்றது என்பதல்ல. இனிமேல் என்ன நடைபெற வேண்டும் என்பதைத்தான் கேட்கிறேன். அந்த முறையிலே சி.ஐ.டி.க்கள் அவர்கள் அலுவலாக இங்கே வரக் கூடாது என்ற முறைய தாங்கள் அவைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விசிட்டர்ஸ் காலரியிலே உறுப்பினர்களின் அனுமதிபெற்று யார் வேண்டுமானாலும் வரலாம். ஆனால் பிரஸிங்க்ட்ஸ் ஆப் தி ஹவுஸ் என்பதில் சட்ட மன்றத்துக்குள்ளே யாரும் வரமுடியாது, அது போல் சி.ஐ.டி.க்கள், How can they come ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லாபியானாலும் சரி, காலரியானாலும் சரி, சி.ஐ.டி.க்கள் என்ற முறையில் அனுமதிபெற்று வரக் கூடாது. ஆனால் அவர்கள் நடவடிக்கைகளைப் பார்க்க வேண்டுமென்று அனுமதி கேட்டு வரலாம். ஒவ்வொருவரும் சி.ஐ.டி.யா என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது, உறுப்பினர்களோ நானோ சி.ஐ.டி.யா இல்லையா என்று பார்த்துக் கண்டு பிடிக்க முடியாது. சி.ஐ.டி.க்கள் அதிகாரபூர்வமான முறையிலே வரக் கூடாது என்று முடிவு சொல்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவரும் எழுப்பிக் கொண்டிருந்தால் நேரம் ஆகிறது, 234 உறுப்பினர்களும் இப்படியே எழுப்பிக் கொண்டிருந்தால் என்ன செய்ய முடியும் ?

(இ) கேள்வி நேரத்தில் அளிக்கப்பட்ட துணை வினாவிற்கான விடை குறித்து

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, நான் எழுப்புவது ஒழுங்குப் பிரச்சினைக்குள் வருகிறதா இல்லையா என்பதைப் பற்றி, ஏற்கனவே திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுப்பியபோது தாங்கள் முடிவு சொல்லவில்லை, இங்கே நாம் பேசுகின்ற பேச்சுக்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத்தைப் பற்றி வருவதாக இருக்கக்

கூடாது, அப்படிப்பட்ட குறிப்புகள் ரிக்கார்டுகளிலே இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன், ஆகவே இதை நான் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் * * * * என்று சொல்வது அந்தச் சமுதாயத்திற்கு ஓரளவிற்குப் பாதகத்தை ஏற்படுத்தும். அதைப்பற்றி விளக்கம் சொல்லி, அதன் மூலம் அப்படிச் சபைக் குறிப்புகளிலே இருந்தால் அவைகளை நீக்க வேண்டுமென்ற முறையில்தான் நான் சொல்லுகிறேன். இதைப் பற்றி தாங்கள் முடிவு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இதைத்தான் நான் குறிப்பிடுவதற்கு எழுந்தேன். தாங்கள் பலமாக உத்திரவைப் பிறப்பித்து என்னை உட்காரச் சொன்னீர்கள். நான் உட்கார்ந்து விட்டேன். இதைப் பற்றி நான் எழுப்ப நினைத்தபோது என்னை உட்காரச் சொன்னது வேதனைக்குரிய விஷயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சமுதாயத்தை இழிவுபடுத்துகின்ற முறையில் அமைச்சர் அவர்கள் சொன்னதை அவைக்குறிப்புகளிலிருந்து எடுத்து விட வேண்டும் அல்லது அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்லி விட்டால் பொருத்தமாக இருக்கும் என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்ட கருத்தும், உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்ட கருத்தும் என்னைப் பொறுத்த வரையில் ஏற்புடைத்தான கருத்தாக நான் கருதுகிறேன்

* * என்பதைவிட மனமாற்றம் காரணமாக மாறுகிறார்கள் என்பதாக இருக்குமானால் அபிப்பிராயபேதத்திற்கு இடம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அப்படி வருகின்ற கருத்துக்கள் குறிப்பேட்டில் இடம் பெறாமல் இருக்குமானால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நான் பதில் அளிக்கிற நேரத்திலே ஏன் மாறினார்கள், எதற்காக மாறினார்கள் என்று ஆராயப்பட வேண்டும் என்றுதான் குறிப்பிட்டேன். அவர்களுடைய உள்ளத்தை புண்படுத்த வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

---

* * 60-ம் பக்கத்தில் கண்டுள்ள மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆகவே, அது ஒவ்வொருவருடைய எண்ணத்தைப் பொறுத்தது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதை நான் நாளைக்கு நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்து, * * * என்ற குறிப்பு இருக்குமானால் எப்படிச் செய்யலாம் என்பதைப் பற்றி முடிவெடுக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, * * * என்பது அரசாங்கத்தின் ஆய்வுக்கு உரியது அல்ல. அது தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தைப் பொறுத்தது. * * * அதை அரசு ஆய்வு செய்யும் என்று சொல்வதும் தவறு. சலுகை பொருளாதார வசதி அடிப்படையில் அளிக்கப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் * * * * என்று சொல்லியது........

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ஏற்கனவே கருத்து தெரிவித்ததற்குப் பிறகு, நீங்கள் குறிப்பேட்டைப் பார்த்து அதை எப்படித் திருத்துவது என்பதாகச் சொல்லியானதற்குப் பிறகு தயவுசெய்து இதை விட்டுவிட நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவரையில் பத்திரிகைகளிலும் வெளியிட வேண்டாமென்று உத்தரவிடுகிறேன்.

(ஆ) ஓர் உறுப்பினர் விடுதலையானது பற்றிய பேரவைத் தலைவரின் அறிவிப்பு குறித்து—தொடர்ச்சி.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, சபையிலே என்னைப்பற்றித் தவறான தகவலை அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு சொல்லுங்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவையிலே அறிவித்த காரணத்தால் அவையிலேயே தீர்த்துக் கொள்ளலாம் என்று நான் அந்தக் கட்சியின் உறுப்பினர் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன்.

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.